முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.12.2023**, புதன்கிழமை

1. ஞானவாழ்வு தரும் அரங்கனே
நல்வழி காட்டி உலகோரை
வானவர்கள் போற்ற இனிதே
வள்ளலாக மாற்றும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சிலை திங்கள்
அச்சமற சதுர்திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 04 ம் நாள், 20.12.2023, புதன்கிழமை)
3. வாரமதில் அம்பிகானந்தர் யானும்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமில்லா ஞானப்படைகள்
செகமெல்லாம் உருவாக்க வேண்டி
4. வேண்டியே அவதாரம் எடுத்து
வேலவன் வழிபாட்டு முறையை
தொண்டாக பின்பற்ற வேண்டி
தொண்டராக ஏற்று அருளுகின்ற
5. அருளுகின்ற அரங்கன் கருணை
அளவிலா தரும சக்தியாக
வரமென எங்கும் பரவி வர
வணங்கி கலியுக மக்கள்
6. மக்களே தொடரத்தான் வேண்டும்
மகான் சேவை நெறிமுறையோடு
தேக்கமின்றி அன்னதான சேவை
தேசமெங்கும் தடையற நடக்கவே

7. நடக்கவே நாடு நலம்பெறும்
நல்லோர்கள் எங்கும் பெருகி
இடரை தருமத்தை கொண்டுமே
இலகுவாய் மீட்கும் வல்லமை கூடும்

8. கூடவே அரங்கன் பேரிலான
குறையிலா தரும பலமிக்க
நாடெங்கும் உள்ள கிளை சங்கங்கள்
நாட்டிடுவேன் ஞானபீடமாக

9. ஆகவே அரங்கன் ஆளுமை
அளவிலா கொண்ட தரும பீடமாக
மிகைபட சக்தி பெருகி
மண்ணுலகில் மக்களை காக்கும்

10. காக்கும் ஞானத் தலைமையை
கருணை நிறைந்த ஞானவான்கள்
ஆக்கமுடன் ஆளுமை புரிகின்ற
அற்புதமான ஞான ஆட்சியை படைக்கநேரும்

11. நேருமை கொண்ட அரங்கனின்
நிலவுலகில் தொண்டர் படைகளே
வருங்காலம் அற்புதம் நிகழ்த்தும்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–